ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2471/68 - 2026 ජනවාරි මස 17 වැනි සෙනසුරාදා - 2026.01.17

*2471/68 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி. 9/2025

**1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம்**

1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் பிரிவுகள் 18, 24, 28 மற்றும் 30 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, சொல்லப்பட்ட சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (ஏ) மற்றும் (ஒ) பந்திகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பிமல் நிரோஷன் ரத்னாயக்க,
போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் நகர
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2026.01.16.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திர கைமாற்றல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1A - PG 7477 — 353 (2026/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. செல்லுபடியான பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வேறோராளுக்கு அல்லது உருவகத்துக்கு கைமாற்ற நாடும் (இவ்வொழுங்குவிதிகளில் கைமாற்றுநர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரால் –

(அ) அவர் (அத்தியாயம் 203) மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட அந்தந்த வசுவண்டியின் சொந்தக்காரர் என உறுதிப்படுத்தல் வேண்டும்;

(ஆ) அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் மற்றும் அட்டவணை III இன் விடயம் 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டணத்துடன் பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்துடன் எழுத்தில் அல்லது இலத்திரனியல் முறையில் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை கைமாற்றுவதற்கான முன்னங்கீகாரத்தை பெறுவதற்கு, ஆணைக்குழுவின் தவிசாளருக்கு விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்க வேண்டும்;

(இ) (ஆ) பந்தியின்கீழ் விண்ணப்பத்தை சமர்ப்பணஞ் செய்யுமுன்னர் இயைபான பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தில் எந்தவொரு நீதிமுறை நடவடிக்கைகளும், பொதுமக்கள் முறைப்பாடுகளும், நிறுவனஞ்சார் புலனாய்வுகளும், ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு ஏதேனும் சட்டக்கடப்பாடும் இல்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்;

(ஈ) (ஆ) பந்தியின்கீழ் விண்ணப்பத்தை சமர்ப்பணஞ் செய்யுமுன்னர் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திம் தொடர்பான ஏதேனும் கட்டணம், சம்பவ ஏட்டுக் கட்டணம், நுழைவுக் கட்டணம், தண்டப்பணங்கள், கடன்கள் அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் எந்தவொரு பற்றாக்குறையுமின்றி தக்கவாறு தீர்க்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்;

(உ) அத்தகைய கைமாற்றுநரினால் ஆணைக்குழுவுக்கு அல்லது வேறுவகையில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பதிவு செய்யப்பட்ட அற்றோனித் தத்துவத்தினை இல்லாதொழித்தல் அல்லது இல்லாதாக்கல்;

(ஊ) ஆணைக்குழுவினால் (இவ்வொழுங்கு விதிகளில் கைமாற்றம்பெறுநர் என குறிப்பீடு செய்யப்படும்) கைமாற்றம் பயனுறுத்தப்படும் ஆளுக்கு பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் வரை அந்தந்த வசுவண்டியை தொடர்ந்து தொழிற்படுத்தலாம்; அத்துடன்

(எ) பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் கைமாற்றப்பட்டவுடன் அத்தகைய அனுமதிப் பத்திரத்தின் சொத்தாண்மையை கோருவதற்கு உரித்துடையவராகமாட்டார்.

3. (இவ்வொழுங்குவிதிகளில் “கைமாற்றம்பெறுநர்” என குறிப்பீடு செய்யப்படும்) செல்லுபடியான பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமொன்றின் கைமாற்றம் பெறுநராக வர உட்கருதும் எவரேனும் ஆள், அந்தந்த வசுவண்டியின் உடைமை கிடைக்கப்பெற்று மற்றும் (203 ஆம் அத்தியாயம்) மோட்டார் வாகனச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பெற்றுக்கொண்ட பதிவுச்சான்றிதழைப் பெற்று ஒரு வாரத்திற்குள்ளாக V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்படுத்தப்பட்டுள்ள ஆவணப்படுத்தலுடன் அட்டவணை III இன் விடயம் 2 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டணத்துடன் பொருளளவில் IV ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்துடன் எழுத்தில் அல்லது இலத்திரனியல் முறையில் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு, விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

4. ஒழுங்குவிதி 3 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பணஞ் செய்யுமுன்னர் கைமாற்றம் பெறுநர் இரண்டு மில்லியன் ரூபாய் இருப்புத் தொகையொன்றினை பேணிவருவதனை, உடன் நேர்முற்போந்த ஆறு மாதங்கள் எனும் காலப்பகுதியை மேவுகின்ற வங்கிக்கூற்றொன்றினால் கைமாற்றம் பெறுநரின் நிலைத்திருக்கக்கூடிய நிதிசார் தகுதி நிரூபிக்கப்பட வேண்டும்.

5. ஆணைக்குழுவானது, சட்டத்தின் பிரிவுகள் 18 மற்றும் 24 இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு, ஒழுங்குவிதி 3 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விண்ணப்பம் கிடைக்கப்பெற்று இரண்டு வாரங்களுக்குள்ளாக அல்லது ஆணைக்குழுவினால் அறிவிப்பு செய்யப்படும் அத்தகைய பிந்தைய தேதியில் கைமாற்றம் பெறுநருக்கு பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்.

6. கைமாற்றம் பெறுநர் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிபத்திரமொன்றை

(அ) பயணப்போக்குவரத்து சேவை அனுமதிபத்திரமானது தனிநபரொருவருக்கு அல்லது கம்பனியொன்றுக்கு கைமாற்றப்படுமிடத்து; அத்துடன்

(ஆ) இரத்த உறவு முறை அல்லது உறவுமுறையின் அடிப்படையில் கைமாற்றலானது பயன்கொடுக்கப்படும்போது,

அட்டவணை III இன் முறையே விடயங்கள் 3 மற்றும் 5 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படுவதன்மேல், பெறுவதற்கு உரித்துடையவராவார்.

7. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் எற்புடைத்தான ஒழுங்குவிதிகளுக்கிணங்க, அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் நியதி மற்றும் நிபந்தனைகளுக்கேற்பவும் ஆணைக்குழுவினால் காலத்துக்கு காலம் தயாரிக்கப்படும் பயணங்கள் மற்றும் நேர அட்டவணைகளின்படி பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள மார்க்கத்தில் மட்டும் அந்தந்த வசுவண்டியை தொழிற்படுத்த கைமாற்றம்பெறுநர் உரித்துடையவராவார்.

8. ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தில் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை நான்கு அல்லது நான்கிற்கு மேல் இருந்தால், ஒரு கைமாற்றம் பெறுநர் அத்தகைய மொத்தத் தொகையில் இருபத்தைந்து சதவீதத்தினை விஞ்சாத பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்களை மாத்திரம் வைத்திருப்பதற்கு உரித்துடையவராவார்.

9. கைமாற்றம்பெறுநருக்கு பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தால் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கைமாற்றம் பெறுநர் அத்தகைய அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்க அட்டவணை III இன் விடயம் 5 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டணத்துடன் ஆணையாளருக்கு விண்ணப்பிக்க உரித்துடையவராவார்.

10. கைமாற்றம்பெறுநர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை, ஆணைக்குழுவினால் அத்தகைய வழங்கிய தேதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டாண்டுகள் காலம் கடந்து போகும் வரை ஆள் எவருக்கும் அல்லது உருவகத்துக்கு கைமாற்றக் கூடாது.

11. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக-

“சட்டம்” என்பது, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டம் என்று பொருளாகும்;

“ஆணைக்குழு” என்பது, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்று பொருளாகும்;

“இலத்திரனியல்” என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 158(8) இன் கீழ் வரையறுக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் என்று பொருளாகும்; அத்துடன்

“பதிவாளர் தலைமையதிபதி” என்பது, (அத்தியாயம் 122) அற்றோனித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

**அட்டவணை I**

[ ஒழுங்குவிதி 2 (ஆ) ]

**போக்குவரத்து சேவை ஆணைக்குழு**

**பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை கைமாற்றுவதற்கான முன்னங்கீகாரத்தை பெறுவதற்கான கைமாற்றுநரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பப்படிவம்**

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்

| |
|---|
| விண்ணப்ப இலக்கம் :..................... <br> பற்றுச்சீட்டு இலக்கம் :..................... |

குறிப்பு :

1. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பகுதி I இன் கீழுள்ள விபரங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. ஏற்புடையதாயின் பகுதி II, III மற்றும் IV ஐ பூர்த்தி செய்யவும்.
   - (அ) கைமாற்றுநர் ஒரு தனிநபராக இருப்பின் பகுதி II ஏற்புடைத்தாகும்.
   - (ஆ) கைமாற்றுநர் ஒரு கம்பனியாக இருப்பின் பகுதி III ஏற்புடைத்தாகும்.
   - (இ) கைமாற்றுநர் இறந்திருப்பின் பகுதி IV ஏற்புடைத்தாகும்.
3. விண்ணப்பமானது சத்தியபிரமாண ஆணையாளர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டு அத்தகைய சத்தியப்பிரமாண ஆணையாளரினால் தக்கவாறு சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**பகுதி I**

<u>கைமாற்றுநரின் தகவல்</u>

1. வசுவண்டியின் பதிவு இலக்கம் : .................................
2. NTC இலக்கம் :...........................................................
3. அண்மைக்களத் தொடர்பாடல் (NFC) அட்டை தொடர் இலக்கம் :...............................
4. கைமாற்றுநரின் முழுப்பெயர் :...........................................................
5. (1) கைமாற்றுநரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :...........................................................
   (2) கைமாற்றுநரின் வரிசெலுத்துநர் - இனங்காணல் இலக்கம் :...........................................................
6. கைமாற்றுநர் இலங்கையில் வசிக்கின்றாரா அல்லது வெளிநாட்டில் வசிக்கின்றாரா? :....................................................
7. கைமாற்றுநர் இறந்துவிட்டாரா? :...........................................................
8. கைமாற்றுநர் கம்பனியாகவிருப்பின் :...........................................................
   (1) கம்பனியின் பெயர் :...........................................................
   (2) கம்பனியின் கூட்டிணைப்பு இலக்கம் :...........................................................
   (3) கம்பனியின் வரிசெலுத்துநர்- இனங்காணல் இலக்கம்:...........................................................

9. தொடர்பு விபரங்கள் :

(1) முகவரி :

(அ) நிரந்தர முகவரி :............................................................

(ஆ) கடிதத்தொடர்பு முகவரி :............................................................

(2) தொலைபேசி இலக்கம் :............................................................

நிலையான :............................................................கையடக்க :............................................................

வட்சப் இலக்கம் :............................................................

(3) மின்னஞ்சல் முகவரி :............................................................

(4) தொலைநகல் இலக்கம் :............................................................

(5) மேலே கொடுக்கப்பட்டவற்றில் விரும்பத்தக்க தொடர்பு வழிமுறை :............................................................

10. (1) மார்க்கம் :............................................................ இலிருந்து .................... க்கு

(2) மார்க்க இலக்கம் :............................................................

11. சேவை : சாதாரண/ அரைச் சொகுசு/ சொகுசு/அதிசொகுசு*

12. பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திர செல்லுபடி காலம் :.................................... இலிருந்து ............. க்கு

13. பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை கைமாற்றுவதற்கான காரணம் :..................................................
..........................................................................................................................................................................................

* விடயம் 11 இன் நோக்கங்களுக்காக-

(அ) “சாதாரண சேவை” என்பது, அமர்ந்திருக்கும் மற்றும் நிற்கும் பயணிகளை ஏற்றிச்செல்லல் அனுமதிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்களில் அனுமதிக்கப்பட்ட வசுவண்டி சேவை எனப் பொருளாகும். இந்த சேவைக்குரிய வசுவண்டிகள் பயணிகளை ஏற்றி இறக்கும் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் பெயர் குறிப்பிடப்பட்ட வழக்கமான பேரூந்து நிறுத்தங்களில் நிறுத்த வேண்டும். பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணங்கள் ஆணைக்குழுவினால் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட நியம கட்டணங்களாதல் வேண்டும்.

(ஆ) “அரைச்சொகுசு சேவை” என்பது, அமர்ந்திருக்கும் பயணிகளை மாத்திரம் அனுமதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்களில் அனுமதிக்கப்பட்ட வசுவண்டி சேவை எனப் பொருளாகும். இச்சேவைக்குரிய வசுவண்டிகள் பயணிகளை ஏற்றி இறக்கும் நோக்கங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்ட பேரூந்து நிறுத்தங்களில் நிறுத்த வேண்டும். ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான சாதாரண கட்டணத்தை விட ஒன்றரை மடங்கு வரையான கட்டணம் நியம கட்டணமாகவிருத்தல் வேண்டும்.

(இ) “சொகுசு சேவை” என்பது, அமர்ந்திருக்கும் பயணிகளை மாத்திரம் அனுமதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்களில் குளிரூட்டப்பட்ட பேரூந்துகளை பயன்படுத்தும் அனுமதிக்கப்பட்ட வசுவண்டி சேவை எனப் பொருளாகும். ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான சாதாரண கட்டணத்தின் இரண்டு மடங்கை விஞ்சாத கட்டணம் நியம கட்டணமாகவிருத்தல் வேண்டும்.

(ஈ) “அதிசொகுசு சேவை” என்பது, அமர்ந்திருக்கும் பயணிகளை மாத்திரம் அனுமதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்களில் குளிரூட்டப்பட்ட பேரூந்துகளை பயன்படுத்தும் அனுமதிக்கப்பட்ட வசுவண்டி சேவை எனப் பொருளாகும். இச்சேவைக்குரிய வசுவண்டிகளில் சீராக்கக்கூடிய சாய்வு இருக்கைகள், கால்தாங்கிகள் மற்றும் காற்றுதாங்கி (பலூன்) முறைமை பொருத்தப்பட்டிருக்கும். ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான சாதாரண கட்டணத்தின் மூன்று மடங்கை விஞ்சாத கட்டணமும் மற்றும் வசுவண்டியானது நெடுஞ்சாலையில் தொழிற்படுத்தப்படும் போது சாதாரண கட்டணத்தின் இரண்டரை மடங்கை விஞ்சாத கட்டணமும் நியம கட்டணமாகவிருத்தல் வேண்டும்.

**கைமாற்றம் பெறுநரின் தகவல்**

14. கைமாற்றம்பெறுநரின் முழுப்பெயர் :........................................................
15. (1) கைமாற்றம்பெறுநரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :........................................................
    (2) கைமாற்றம்பெறுநரின் வரிசெலுத்துநர் - இனங்காணல் இலக்கம் :........................................................
16. கைமாற்றம்பெறுநர் கம்பனியாகவிருப்பின் :........................................................
    (1) கம்பனியின் பெயர் :........................................................
    (2) கம்பனியின் கூட்டிணைப்பு இலக்கம் :........................................................
    (3) கம்பனியின் வரிசெலுத்துநர்- இனங்காணல் இலக்கம்:........................................................
17. தொடர்பு விபரங்கள் :
    (1) முகவரி :
        (அ) நிரந்தர முகவரி :........................................................
        (ஆ) கடிதத்தொடர்பு முகவரி :........................................................
        மாவட்டம் :........................................................ பிரதேச செயலகம் :........................................................
    (2) தொலைபேசி இலக்கம் :........................................................
        நிலையான :........................................................கையடக்க :........................................................
        வட்சப் இலக்கம் :........................................................
    (3) மின்னஞ்சல் முகவரி :........................................................
    (4) தொலைநகல் இலக்கம் :........................................................

## பகுதி II

...................... ஆகிய நான், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் எனது அறிவுக்குட்பட்டவகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் சான்றளிக்கின்றேன். அத்துடன் பதிவு இலக்கம் ............ கொண்ட வசுவண்டி தொடர்பில் .............. இலிருந்து ................. க்கு செல்லும் மார்க்கத்தில் தொழிற்படுத்த எனக்கு வழங்கப்பட்ட NTC இலக்கம் .......... கொண்ட பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை .......... (அடையாள அட்டை இலக்கம் கொண்ட .....................................) க்கு கைமாற்ற இத்தால் சம்மதம் தெரிவிப்பதோடு சொல்லப்பட்ட பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமானது வேறொரு தரப்பினருக்கு கைமாற்றப்பட்ட பின்னர், அவ்வனுமதிப்பத்திரம் தொடர்பாக எந்தவொரு உரிமை, அக்கறை அல்லது உரித்துடைமை கோரமாட்டேன் என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

................
திகதி

............................................
கைமாற்றுநரின் கையொப்பம்

கைமாற்றுநரின் இடது கைப்பெருவிரல் அடையாளம்

சாட்சிகள் : (1) முழுப்பெயர் :.........................
முகவரி :.........................
கையொப்பம் :.........................
திகதி :.........................
(2) முழுப்பெயர் :.........................
முகவரி :.........................
கையொப்பம் :.........................
திகதி :.........................

## பகுதி III

...................... பெயரை வைத்திருக்கும் கம்பனி ஆகிய நான், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் எமது அறிவுக்குட்பட்டவகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் சான்றளிக்கின்றோம். பதிவு இலக்கம் ............ கொண்ட வசுவண்டி தொடர்பில் .............. இலிருந்து ................. க்கு செல்லும் மார்க்கத்தில் தொழிற்படுத்த எமது கம்பனிக்கு வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்திரமானது வேறொரு தரப்பினருக்கு கைமமாற்றப்பட்ட பின்னர், அவ்வனுமதிப்பத்திரம் தொடர்பாக எந்தவொரு உரிமை, அக்கறை உரித்துடைமை கோரமாட்டோம் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

(1) கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்
(அ) பெயர் :.........................
(ஆ) பதவி :.........................
(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :.........................
(ஈ) கையொப்பம் :.........................

(2) கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்
(அ) பெயர் :.........................
(ஆ) பதவி :.........................
(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :.........................
(ஈ) கையொப்பம் :.........................

திகதி ................

............................................
கம்பனியின் உத்தியோகபூர்வ இலச்சினை

சாட்சிகள் : (1) முழுப்பெயர் :.........................
முகவரி :.........................
கையொப்பம் :.........................
திகதி :.........................
(2) முழுப்பெயர் :.........................
முகவரி :.........................
கையொப்பம் :.........................
திகதி :.........................

## பகுதி IV

(1) விண்ணப்பகாரருக்கும் இறந்த கைமாற்றுநருக்கும் இடையிலான இரத்த உறவுமுறை அல்லது உறவுமுறை ......................
................................................

(2) நீதிமன்ற தீர்ப்புக்குட்பட்டு கைமாற்றம் பயனுறுத்தப்பட்டிருக்குமிடத்து நீதிமன்ற தீர்ப்பின் விபரங்கள் :

(1) நீதிமன்றத்தின் பெயர் :.........................
(2) வழக்கு இல. :.........................
(3) தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி :.........................
(4) விண்ணப்பகாரரின் பெயரில் மரணசாசன அதிகாரப் பத்திரம் அல்லது மரணசாசன நிருவாக பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா :.........................

.............................................. ஆகிய நான், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்குட்பட்ட வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் சான்றளிக்கின்றேன். அத்துடன் பதிவு இலக்கம் ................... கொண்ட வசுவண்டி தொடர்பில் .................. இலிருந்து .................. க்கு செல்லும் மார்க்கத்தில் தொழிற்படுத்த ................ க்கு (இறந்த கைமாற்றுநரின் பெயர்) வழங்கப்பட்டுள்ள பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை எனக்கு கைமாற்றித்தருமாறு கோருகின்றேன்.

திகதி : ................

............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

விண்ணப்பகாரரின் இடது கைப்பெருவிரல் அடையாளம்

சாட்சிகள் :

(1) முழுப்பெயர் :.........................

முகவரி :.........................

கையொப்பம் :.........................

திகதி :.........................

(2) முழுப்பெயர் :.........................

முகவரி :.........................

கையொப்பம் :.........................

திகதி :.........................

**சத்தியப்பிரமான ஆணையாளரின் தகவல்**

1. முழுப்பெயர்:................................................................
2. முகவரி:...................................................................
3. தொலைபேசி இலக்கம்:..................................................
4. மின்னஞ்சல் முகவரி:...........................................................

மேற் குறிப்பிடப்பட்ட பெயரினை உடைய கைமாற்றுநர் / விண்ணப்பகாரர் அவனுடைய / அவளுடைய / அவர்களுடைய கையொப்பம் மற்றும் இடது கைப்பெருவிரல் அடையாளமானது (கம்பனியாகவிருப்பின்) கையயொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை) ...................... இல் .............................. ஆம் நாளன்று ...................... ஆம் தேதியில் சாட்சிகள் சமூகத்திலும் எனது சமூகத்திலும் இடப்பட்டது.

.......................................................................
சத்தியப்பிரமான ஆணையாளர்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

கைமாற்றுநர் செல்லுபடியான பயணப்போக்குவரத்துசேவை அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்றார். கைமாற்றுநர் அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள எஞ்சியகாலப்பகுதிக்கு பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்றலாம்.

☐ அங்கீகரிக்கப்பட்டது

☐ மறுக்கப்பட்டது

............................................
தவிசாளர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**அட்டவணை II**

[ஒழுங்கு விதி 2(ஆ)]

**பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்றுநரின் கைமாற்றினால் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

| *கைமாற்றுநர் ஒரு தனிநபராகவிருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றுநர் ஒரு கம்பனியாகவிருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றுநர் இறந்திருப்பின் அல்லது கைமாற்றம் இரத்த உறவு முறை/ உறவுமுறையில் பயனுறுத்தப்பட வேண்டியிருப்பின் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய ஆவணங்கள்* |
|---|---|---|
| 1. பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திர புத்தகம், ஒட்டுத்துண்டு மற்றும் அண்மைக்களத் தொடர்பாடல் (NFC) அட்டை | 1. பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் | 1. பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திர புத்தகம், ஒட்டுத்துண்டு மற்றும் அண்மைக்களத் தொடர்பாடல் (NFC) அட்டை |
| 2. கைமாற்றுநரின் தேசிய அடையாள அட்டை (பிரதியுடன்) | 2. கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு அலுவலர்களின் தேசிய அடையாள அட்டைகள் | 2. இறந்த கைமாற்றுநரின் தேசிய அடையாள அட்டை (பிரதியுடன்) |

| *கைமாற்றுநர் ஒரு தனிநபராகவிருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றுநர் ஒரு கம்பனியாகவிருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றுநர் இறந்திருப்பின் அல்லது கைமாற்றம் இரத்த உறவு முறை/ உறவுமுறையில் பயனுறுத்தப்பட வேண்டியிருப்பின் சமர்ப்பிக்கப்படட வேண்டிய ஆவணங்கள்* |
|---|---|---|
| 3. இவ்வட்டவணையின் 1 ஆம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் ஒரு சத்தியக்கூற்று | 3. இவ்வட்டவணையின் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் ஒரு சத்தியக் கூற்று (இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் வேறான சத்தியக் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும்) | 3. இவ்வட்டவணையின் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளவில் ஒரு சத்தியக்கூற்று |
| 4. கைமாற்றுநரின் கடவுச்சீட்டு அளவு வர்ணப் புகைப்படம் | 4. கம்பனியின் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கடவுச்சீட்டு அளவு வர்ணப் புகைப்படங்கள் இரண்டு (ஒவ்வொருவருக்கும் ஒன்று) | 4. இறந்த கைமாற்றுநரின் கடவுச்சீட்டு அளவு வர்ணப் புகைப்படம் |
| | 5. கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழ் (பிரதியுடன்) | 5. இறந்த கைமாற்றுநரின் சான்றுப்படுத்தப்பட்ட மரண சான்றிதழ் |
| | 6. கம்பனியின் அமைப்பக விதிகள் | 6. இறந்த கைமாற்றுநருடனான இரத்த உறவுமுறை/ உறவுமுறையை நிரூபிக்கும் சான்றுப்படுத்தப்பட்ட ஆவணப்பிரதிகள் (பிறப்புச்சான்றிதழ், திருமணச் சான்றிதழ் முதலியன) |
| | 7. பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்ற அதிகாரமளிக்கும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | 7. அத்தகைய தீர்ப்பினால் கைமாற்றம் பயனுறுத்தப்படுத்தப்படும் போது நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் மரணசாசன அதிகாரப் பத்திரம் அல்லது மரணசாசன நிருவாகப்பத்திரத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி |
| 5. சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகள் (ஒவ்வொருவரின் பிரதிகளுடன்) | 8. சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகள் (ஒவ்வொருவரின் பிரதிகளுடன்) | 8. சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகள் (ஒவ்வொருவரின் பிரதிகளுடன்) |

குறிப்பு:

1. கைமாற்றுநரினால், ஆணைக்குழுவுக்கு ஏலவே பதிவு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், இல்லாதொழிப்பின் அல்லது சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவம் இல்லாதாக்கப்பட்டதற்கான மூலப் பிரதி பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்திலிருந்தான இயைபான பதிவேட்டின் தொகுதி மற்றும் இருமடித்தாள்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. கைமாற்றுநர் வெளிநாடு சென்றிருப்பின், மூல அற்றோணித்தத்துவமானது குறித்த நாட்டில் நிறைவேற்றப்பட்டு பதிவாளர் தலைமையதிபதி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இயைபான பதிவேட்டின் தொகுதி மற்றும் இருபமடித்தாள்களின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளுடன் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அட்டவணை II இற்கான பின்னிணைப்பு

சத்தியக்கூற்று

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் .............. (முகவரி) வசிக்கும் ....................................... (முழுப்பெயர்) .......................(தேசிய அடையாள அட்டை இலக்கம்) ஆகிய நான் ......................... (கம்பனியின் பெயர்) பெயர் கொண்ட கம்பனி ஆகிய நாம் ................................ (பௌத்த/ இந்து/ இஸ்லாமிய/ கிறிஸ்தவ பக்தர் என்ற வகையில் பயபக்தியாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் பின்வருமாறு (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்:-

1. நான்/ நாம் மேற்குறிப்பிடப்பட்ட பெயருடைய உறுதிப்படுத்துநர் ஆவோம்.

2. நான்/ நாம் இத்தால் அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பயணப்போக்குவரத்து அனுமதிப்பத்திரமானது ஏதேனும் நீதிமுறை நடவடிக்கைகள், பொதுமக்கள் முறைப்பாடுகள், நிறுவனஞ்சார் புலனாய்வு, ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது வேறு ஏதேனும் சட்டக்கடப்பாட்டிலிருந்து விடுபட்டதென ........................ (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின் றேன்/ றோம்)

3. நான்/ நாம் இத்தால், பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமானது ஏதேனும் கட்டணம், சம்பவ ஏட்டுக் கட்டணம், நுழைவுக்கட்டணம், தண்டப்பணங்கள், கடன்கள் அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் எந்தவொரு பற்றாக்குறையுமின்றி தக்கவாறு தீர்க்கப்பட்டுள்ளதென .......................... (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்.

4. நான்/ நாம் இத்தால், ................. (வசுவண்டியின் பதிவு இலக்கம்) தொடர்பில் பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமானது ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது மாகாண அதிகார சபைக்கு வழங்கப்படவில்லையென ................................. (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்

5. நான்/ நாம் இத்தால், ஆணைக்குழுவினால் கைமாற்றும்பெறுநருக்கு மேற்சொல்லப்பட்ட பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் வரை மேற்சொல்லப்பட்ட வசுவண்டியன் தொழிற்பாட்டை தொடர ............... (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்

6. நான்/ நாம் இத்தால் விண்ணப்பத்துடன் எந்தவொரு மோசடியான ஆவணத்தையோ அல்லது பிழையான தகவலையோ சமர்ப்பிக்கவில்லையென .............................. (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்

7. நான்/நாம் இத்தால், அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமானது ஆணைக்குழுவினால் கைமாற்றம்பெறுநருக்கு வழங்கப்பட்டவுடன் அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் சொத்தாண்மையை நான்/ நாம் கோரமாட்டேன்/ டோம் என ................................. (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்.

8. நான்/ நாம் மேலும் இத்தால், அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பிலான ஆணைக்குழுவின் எந்தவொரு தீர்மானத்தையும் நான்/ நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ றோம் என ................................ (சத்தியஞ்செய்கின் / வெளிப்படுத்துகின்) றேன்/ றோம்

| | |
|---|---|
| மேற்போந்த சத்தியக்கூற்றானது மேலே பெயர்குறிப்பிடப்பட்ட உறுதிப்படுத்துநர்/ களுக்கு என்னால் வாசிக்கப்பட்டு விளங்கப்படுத்தப்பட்டு, அவர்களால் அதன் உட்பொருள் புரிந்து கொள்ளப்பட்டு ............................ ஆம் நாளன்று .............. ஆம் தேதியில் எனது சமூகத்தில் உறுதிப்படுத்தி அவனுடைய/ அவளுடைய/ அவர்களுடைய கையொப்பத்தை இட்டார். | (கையொப்பம்/ கம்பனியின் கையொப்பமும் உத்தியோகபூர்வ இலச்சினையும்)<br><br>உறுதிப்படுத்துநர் |

எனது முன்னிலையில்,

............................
சத்தியப்பிரமான ஆணையாளர்

**அட்டவணை III**

[ஒழுங்கு விதி 2(ஆ) மற்றும் ஒழுங்குவிதி 6]

**கட்டணம்**

| இலக்கம் | விவரணம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1. | செல்லுபடியான பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்ற ஆணைக்குழுவின் முன்னங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல் (கைமாற்றுநரினால் செலுத்தப்பட வேண்டும்) | 5,000.00 |
| 2. | செல்லுபடியான பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம் | 5,000.00 |

| இலக்கம் | விவரணம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 3. | தனிநபரொருவருக்கு அல்லது கம்பனியொன்றுக்கு பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்றல் | 300,000.00 |
| 4. | வேறொரு உரித்துடைய தரப்பினருக்கு பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்ற (கைமாற்றுநர் இறந்துள்ள போது மற்றும் இரத்த உறவுமுறை/ உறவுமுறையின் அடிப்படையில் கைமாற்றம் பயன்கொடுக்கப்படும் போது) | 25,000.00 |
| 5. | திருத்தப்பட்ட சொத்தாண்மையுடன் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் வருடாந்த புதுப்பித்தல் (நிதிசார் பெறுமதி அடிப்படையில் கட்டணஞ் செலுத்தும் பயணப்போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு இது ஏற்புடைத்தாகாது.*) | 25,000.00 |

*விடயம் 5 இன் நோக்கங்களுக்காக -

"நிதிசார் பெறுமதி" என்பது, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முறையியலுக்கு ஏற்ப, குறித்துரைக்கப்பட்ட சதவீதமானது அரசாங்க அரசிறை அல்லது வருமானப் பங்காகப் பெறப்படும், அங்கீகரிக்கப்பட்ட ஆசன ஏற்றுதிறன், சுமை காரணி, தொழிற்படுத்தும் சுற்றுகளின் எண்ணிக்கை, ஏற்புடையற்பாலதான மார்க்க கட்டணம் மற்றும் வருடத்திற்கு தொழிற்படுத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக தொழினுட்ப மற்றும் தொழிற்பாட்டு மாறிகளின் அடிப்படையின்மீது கணக்கிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட மார்க்கத்திற்கு ஏற்புடையற்பாலதான தொடக்க நிலையான விலையாகும்.

## அட்டவணை IV

[ஒழுங்குவிதி 3]

## போக்குவரத்து சேவை ஆணைக்குழு

### பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தினை கைமாற்றுவதற்கான கைமாற்றம்பெறுநரிலான விண்ணப்பம்

குறிப்பு : 1. ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் பகுதி I இலுள்ள விபரங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. கைமாற்றம்பெறுநர் ஒரு தனிநபராக இருப்பின் பகுதி II ஏற்புடைத்தாகும்.

3. கைமாற்றம்பெறுநர் ஒரு கம்பனியாக இருப்பின் பகுதி III ஏற்புடைத்தாகும்.

4. விண்ணப்பமானது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டு அத்தகைய சத்தியப்பிரமாண ஆணையாளரினால் தக்கவாறு சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(விலைமனு நடவடிக்கை முறையின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்கு மட்டும்)

1. விலை கேட்பு விண்ணப்ப இலக்கம்: ..................................................
   (1) விலை கேட்பு விலை: ........................................................
   (2) பற்றுச்சீட்டு இலக்கம்: .......................................................
   (3) திகதி: ...............................................................................

## பகுதி I

**கைமாற்றம்பெறுநரின் தகவல்**

2. (1) (அ) கைமாற்றம் பெறுநரின் முழுப்பெயர் (சிங்களத்தில்):.........................................
(ஆ) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):.....................................................................
(2) (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்:.........................................................................
(ஆ) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.....................................................................
(3) பிறப்புச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்:...................................................
(4) திருமணச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்:................................................

*மேற்குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள பெயரில் முரண்பாடு காணப்படுமிடத்து, கைமாற்றம்பெறுநர் வித்தியாசமான பெயர்கள் ஒரே நபருக்குரியவை என நிரூபிக்க சத்தியக்கூற்றொன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

3. (1) கைமாற்றம்பெறுநரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்:..............................................
(2) கைமாற்றம்பெறுநரின் வரி செலுத்துநர் - இனங்காணல் இலக்கம்:.............................................

4. கைமாற்றம்பெறுநர் ஒரு கம்பனியாகவிருப்பின் -
(1) கம்பனியின் பெயர்:...............................................................
(2) கம்பனியின் கூட்டிணைப்பு இலக்கம்:............................................................; அத்துடன்
(3) கம்பனியின் வரி செலுத்துநர் - இனங்கணல் இலக்கம்:.................................

5. தொடர்பு விபரங்கள்:
(1) முகவரி:
(அ) நிரந்தர முகவரி:..................................................................
(ஆ) கடிதத்தொடர்பு முகவரி:.....................................................

(2) தொலைபேசி இலக்கம்:......................................................................
நிலையான :................................. கையடக்கம்:...........................
வட்சப் இலக்கம்:..................................

(3) தொலைநகல் இலக்கம்:........................................................
(4) மின்னஞ்சல் முகவரி:...........................................................
(5) மேலே கொடுக்கப்பட்டவற்றில் விரும்பத்தக்க தொடர்பு வழிமுறை:..........................

6. (அ) மாகாணம்:.............................. (ஆ) மாவட்டம்:...........................
(இ) பிரதேச செயலாளர் பிரிவு:..............................................
(ஈ) பொலிசு இடப்பரப்பு:.............................................................

**கைமாற்றுநரின் தகவல்**

7. கைமாற்றுநரின் முழுப்பெயர் :...................................................................

8. (1) கைமாற்றுநரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :............................
(2) கைமாற்றுநரின் வரிசெலுத்துநர் - இனங்காணல் இலக்கம் :.....................................

9. கைமாற்றுநர் கம்பனியாகவிருப்பின்-
(1) கம்பனியின் பெயர்: ..............................................................................
(2) கம்பனியின் கூட்டிணைப்பு இலக்கம்: ......................................................................
(3) கம்பனியின் வரிசெலுத்துநர் - இனங்காணல் இலக்கம் :.............................................

**வசுவண்டி பற்றிய விவரணம்:**

10. (1) வசுவண்டியின் பதிவு இலக்கம்:..................................................................
(2) (அ) NTC இலக்கம் :...................................................................
(ஆ) அண்மைக்களத் தொடர்பாடல் (NFC) அட்டை தொடர் இலக்கம் : .................................
(3) பதிவுச்சான்றிதழில் இலக்கமிடப்பட்டுள்ளது போல் வசுவண்டியிலுள்ள ஆசனங்களின் எண்ணிக்கை :......................
.................................................................................
(4) வசுவண்டியின் கதவுகளின் எண்ணிக்கை:.............................................................

(5) உற்பத்தி வருடம்:....................................
(6) பதிவு செய்யப்பட்ட திகதி:.......................................................
(7) இறைவரி உரிமம் மற்றும் வாகன புகை பரிசோதனை சான்றிதழின் இலக்கம் மற்றும் செல்லுபடி காலம்:
........................................................
(8) அடிச்சட்டக இலக்கம்:..................................................
(9) இயந்திர இலக்கம்:........................................................
(10) வகை:.........................................................................
(11) அமைப்பு:.....................................................................
(12) வசுவண்டியின் உடைமை கிடைக்கும் திகதி:.....................................
(13) வசுவண்டியின் தகுதிச் சான்றிதழ்:
 (அ) தொடர் இலக்கம்:......................................................
 (ஆ) தேதி:.........................................................................
 (இ) கராஜின் பெயர்:.........................................................
 (ஈ) கராஜின் பதிவு இலக்கம்:.............................................

(14) காப்புறுதி
 (அ) காப்புறுதி கம்பனியின் பெயர்:...............................................
 (ஆ) காப்புறுதிச் சான்றிதழின் இலக்கம்:.......................................
 (இ) காலாவதித்தேதி:....................................................................

(15) வசு வண்டியானது நிதி வசதியூடாக (குத்தகை/ கடன்) கொள்வனவு செய்யப்பட்டதா: ஆம்/ இல்லை
 (அ) ஆம் எனில், நிறுவனத்தின் பெயர்:....................................................
 (ஆ) தொகை:...............................................
 (இ) செலுத்தவேண்டிய தவணைகளின் எண்ணிக்கை: ........................................................

(16) வசுவண்டி பணிக்கழு
 (அ) நிரந்தர ஓட்டுநரின் பெயர்:..........................................................
 (ஆ) நிரந்தர ஓட்டுநரின் பதிவு இலக்கம்:.............................................
 (இ) நிரந்தர ஓட்டுநரின் NTC அடையாள அட்டை இலக்கம்:..........................................
 (ஈ) செல்லுபடி காலம்:...................................................
 (உ) மேலதிக ஓட்டுநரின் பெயர்:........................................................
 (ஊ) மேலதிக ஓட்டுநரின் பதிவு இலக்கம்:.................................................................
 (எ) மேலதிக ஓட்டுநரின் NTC அடையாள அட்டை இலக்கம்:................................................
 (ஏ) செல்லுபடி காலம்:.....................................................
 (ஐ) நடத்துநரின் பெயர்:..............................................................
 (ஒ) நடத்துநரின் பதிவு இலக்கம்:.................................................................
 (ஓ) நடத்துனரின் NTC அடையாள அட்டை இலக்கம்:.....................................................
 (ஔ) செல்லுபடி காலம்:.......................................................

(17) விண்ணபிக்கப்பட்டுள்ள மார்க்கம்

 (அ) மார்க்க இலக்கம்:..................................................
 (ஆ) ..................................இலிருந்த ........................க்கு
 (இ) வசுவண்டி தொடங்குமிடத்திலான பிரதேச செயலாளர் பிரிவு:.........................................
 (ஈ) வசுவண்டி தொடங்குமிடத்திலான பொலிசு இடப்பரப்பு:.................................................
 (உ) வசுவண்டியின் சேருமிடத்திலான பிரதேச செயலாளர் பிரிவு:..........................................
 (ஊ) வசுவண்டியின் சேருமிடத்திலான பொலிசு இடப்பரப்பு:.................................................
 (எ) மார்க்கத்தின் பிரதான நிறுத்தும் நிலையங்கள்:....................................................
 (ஏ) சிற்றுண்டிக்காக வசுவண்டி நிறுத்துமிடங்கள்:.....................................................
 (ஐ) பயணத்தின் மொத்த நீளம் (கி.மீ) :.......................................................................
 (ஒ) அன்றாட பயணங்களின் எண்ணிக்கை:..............................................................
 (ஓ) வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து சேருமிடத்திற்கான தூரம்:.....................................

**<u>கைமாற்றம்பெறுநரின் சொத்து விபரங்கள்</u>**

11. (1) வருடாந்த வருமானம்: .........................................

(2) (அ) கைமாற்றம்பெறுநர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமொன்றை வைத்துள்ளாரா? ஆம்/ இல்லை

(ஆ) பதில் ஆம் எனில், கைமாற்றம்பெறுநர் தொடர்ச்சியாக மாகாணங்களுக் கிடையிலான வசுவண்டிச் சேவை வழங்குவதில் எவ்வளவு காலமாக ஈடுபட்டுள்ளார்? ...........................................

(3) இலங்கையின் ஏதேனும் நீதிமன்றமொன்றினால் கைமாற்றம்பெறுநர் வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றாரா?

(4) கைமாற்றம் பெறுநரின் வங்கிக் கணக்கு விபரங்கள்

| வங்கி | கணக்கு இலக்கம் | மாதம் மற்றும் வருடம் | நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

* கைமாற்றம்பெறுநர் இரண்டு மில்லியன் ரூபா இருப்புத்தொகையொன்றினை பேணி வருவதனை விண்ணப்பத்தின் சமர்ப்பணத்தின் உடன் நேர்முற்போந்த ஆறுமாதங்கள் எனும் காலப்பகுதியை மேவுகின்ற வங்கிக்கூற்றொன்றினை இணைப்பதன் மூலம் நிரூபிக்க வேண்டும்.

(5) கைமாற்றம்பெறுநர் கம்பனியொன்றாகவிருப்பின் கம்பனியின் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் ரொக்கமாக (ரூபாய்) ...... .................................................................................... (கைமாற்றம் பெறுநர் இதனை நிரூபிக்க கம்பனியின் வருடாந்த ஐந்தொகையை இதனுடன் இணைக்க வேண்டும்)

**பாகம் II**

.................................................... ஆகிய நான், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பிழையானவை அல்லது மோசடியானவை என வெளிப்படுத்தப்பட்டால் அல்லது நான் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது இவ்வொழுங்குவிதிகளுடன் அல்லது இவ்வனுமதிப்பத்திரத்தின் நியதி மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகாத போது பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமானது இடைநிறுத்தப்படும், இல்லாதாக்கப்படும் அல்லது இல்லாதொழிக்கப்படும் என்பதுடன் அத்தகைய பிழையான தகவல் அல்லது மோசடியான ஆவணங்களின் சமர்ப்பணம் அல்லது இணங்கியொழுகாமை சட்டத்தின் பிரிவு 28 இன் கீழ் தவறொன்றுக்கு இட்டுச்செல்லும் என்பதனையும் நான் நன்கறிவேன் என இத்தால் சான்றளிக்கின்றேன். மேலும் போக்குவரத்து சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படும் நேர அட்டவணைகள், மார்க்கங்கள், பயணங்கள் மற்றும் வேலை பட்டியல்களுக்கேற்ப பயணப்போக்குவரத்து சேவைகளை நான் வழங்க வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| ............................................... | | ..................................................... |
| திகதி | கைமாற்றம் பெறுநரின் இடது கைப்பெருவிரல் அடையாளம் | கைமாற்றம்பெறுநரின் கையொப்பம் |

**பாகம் III**

............................................ பெயருடைய கம்பனியை வைத்திருக்கும் நாம், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பிழையானவை அல்லது மோசடியானவை என வெளிப்படுத்தப்பட்டால் அல்லது

நாம் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது இவ்வொழுங்குவிதிகளுடன் அல்லது இவ்வனுமதிப்பத்திரத்தின் நியதி மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகாத போது பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமானது இடைநிறுத்தப்படும். இல்லாதாக்கப்படும் அல்லது இல்லாதொழிக்கப்படும் என்பதுடன் அத்தகைய பிழையான தகவல் அல்லது மோசடியான ஆவணங்களின் சமர்ப்பணம் அல்லது இணங்கியொழுகாமை சட்டத்தின் பிரிவு 28 இன் கீழ் தவறொன்றுக்கு இட்டுச்செல்லும் என்பதனையும் நாம் நன்கறிவோம் என இத்தால் சான்றளிக்கின்றோம். மேலும் போக்குவரத்து சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படும் நேர அட்டவணைகள், மார்க்கங்கள், பயணங்கள் மற்றும் வேலை பட்டியல்களுக்கேற்ப பயணப்போக்குவரத்து சேவைகளை நாம் வழங்க வேண்டும் என வெளிப்படுத்துகின்றோம்.

(1) கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்
- (அ) பெயர்:........................................................
- (ஆ) பதவி:........................................................
- (இ) தேசிய அடையாள அட்டை இலக்கம்:....................................................
- (ஈ) கையொப்பம்:......................................................

(2) கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்
- (அ) பெயர்:........................................................
- (ஆ) பதவி:........................................................
- (இ) தேசிய அடையாள அட்டை இலக்கம்:....................................................
- (ஈ) கையொப்பம்:......................................................

| | |
|---|---|
| ............................................................ | .............................................................. |
| திகதி | கம்பனியின் உத்தியோகபூர்வ இலச்சினை |

சாட்சிகள் : (1) முழுப்பெயர் : ……….....................
முகவரி:....................................
கையொப்பம்: ……………..........
திகதி:……………….................
(2) முழுப்பெயர் : ……….....................
முகவரி:....................................
கையொப்பம்: ……………..........
திகதி:……………….................

**சத்தியப்பிரமாண ஆணையாளரின் தகவல்**

1. முழுபெயர்:..............................................................
2. முகவரி:..................................................................
3. தொலைபேசி இலக்கம்:................................................
4. மின்னஞ்சல் முகவரி:...........................................................

மேற்குறிப்பிடப்பட்ட பெயரினை உடைய கைமாற்றம்பெறுநர் அவனுடைய / அவளுடைய / அவர்களுடைய கையொப்பம் மற்றும் இடதுகைப்பெருவிரல் அடையாளம் (கம்பனியாகவிருப்பின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை) ...................................... இல் ......................................... ஆம் நாளன்று .................................. ஆம் தேதியில் சாட்சிகள் சமுகத்திலும் எனது சமுகத்திலும் இடப்பட்டது.

......................................................................
சத்தியப்பிரமாண ஆணையாளர்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பிரிவுகள் 18, 24 மற்றும் 28 இன் அடிப்படையில் கைமாற்றம்பெறுநரின் பொருத்தமான தன்மையை கருத்திற் கொண்டு, இத்தால் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்க/ வழங்காதிருக்க முடிவு செய்யப்பட்டது.

...........................................
தவிசாளர்
தேசிய போக்குவரத்து சேவை ஆணைக்குழு

**அட்டவணை V**

**(ஒழுங்குவிதி 3)**

**பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை கைமாற்ற கைமாற்றம் பெறுநரினால் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

| *கைமாற்றம் பெறுநர் ஒரு தனி நபராகவிருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றம் பெறுநர் ஒரு கம்பனியாக-விருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றுநர் இறந்திருப்பின் அல்லது கைமாற்றம் இரத்த உறவு முறை/ உறவு முறையில் பயனுறுத்தப்பட வேண்டியிருப் பின் கைமாற்றம் பெறுநரால் சமர்ப்பிக்கப் பட வேண்டிய ஆவணங்கள்* |
|---|---|---|
| 1. கைமாற்றம் பெறுநரின் தேசிய அடையாள அட்டை ( பிரதியுடன்) | 1. கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு அலுவலர்களின் தேசிய அடையாள அட்டைகள் | 1. கைமாற்றம் பெறுநரின் தேசிய அடையாள அட்டை ( பிரதியுடன்) |
| 2. கைமாற்றம்பெறுநரின் கடவுச்சீட்டு அளவு வர்ணப் புகைப்படம் | 2.கம்பனியின் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கடவுச்சீட்டு அளவு வர்ணப்புகைப்படங்கள் இரண்டு (ஒவ்வொருவருக்கும் ஒன்று) | 2. தேசிய அடையாள அட்டடையிலுள்ள புகைப்படம் தெளிவற்றிருப்பின் இறந்த கைமாற்றுநரின் கடவுச்சீட்டு அளவு வர்ணப் புகைப்படம் |
| 3. கைமாற்றம் பெறுநரின் பிறப்புச் சான்றிதழ் ( பிரதியுடன்) | 3. கம்பனியின் கூட்டிணைப்புச் சான்றிதழ் ( பிரதியுடன்) | 3. இறந்த கைமாற்றுநரின் சான்றுப் படுத்தப்பட்ட மரண சான்றிதழ் |
| 4. கைமாற்றம் பெறுநரின் திருமணச் சான்றிதழ்(பிரதிகளுடன்) | 4. கம்பனியின் அமைப்பக விதிகள் | 4. இறந்த கைமாற்றுநருடனான இரத்த உறவு முறை / உறவு முறையை நிரூபிக்கும் சான்றுப்படுத்தப்பட்ட ஆவணப்பிரதிகள் ( பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் முதலியன) |
| 5.விண்ணப்பத்தின் உடன் நேர்முற்போந்த ஆறுமாத காலப்பகுதியை மேவுகின்ற வங்கிக் கூற்றொன்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | 5. தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட கம்பனியின் வருடாந்த ஐந்தொகையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | |
| | | 5. கைமாற்றம் பெறுநருடனான இரத்த உறவுமுறை / உறவுமுறையை நிரூபிப்பதற்கான சக்தியக் கூற்றொன்று |
| | 6. கைமாற்றுநராக வருவதற்கு இணக்கம் தெரிவித்த கம்பனி பணிப்பாளர் சபையின் தீர்மானம் | 6. அத்தகைய தீர்ப்பினால் கைமாற்றம் பயனுறுத்தப்படும் போது நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் மரண சாசனம் அதிகாரப் பத்திரம் அல்லது மரணசாசன நிருவாகப் பத்திரத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி |
| 6.கைமாற்றம் பெறுநருக்கு வழங்கப்பட்டுள்ள ஓம்படை சான்றிதழ் | | 7. கைமாற்றம் பெறுநருக்கு வழங்கப்பட்டுள்ள ஓம்படை சான்றிதழ் |
| 7.கைமாற்றம் பெறுநருக்கு வழங்கப்பட்டுள்ள கிராம அலுவலர் சான்றிதழ் | | 8. கைமாற்றம் பெறுநருக்கு வழங்கப்பட்டுள்ள கிராம அலுவலர் சான்றிதழ் |
| 8.சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகள் (ஒவ்வொருவரின் பிரதிகளுடன்) | 7. சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகள் (ஒவ்வொருவரின் பிரதிகளுடன்) | 9. சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகள் ( பிரதிகளுடன்) |

| *கைமாற்றம் பெறுநர் ஒரு தனி நபராகவிருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றம் பெறுநர் ஒரு கம்பனியாக-விருப்பின் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்* | *கைமாற்றுநர் இறந்திருப்பின் அல்லது கைமாற்றம் இரத்த உறவு முறை/ உறவு முறையில் பயனுறுத்தப்பட வேண்டியிருப் பின் கைமாற்றம் பெறுநரால் சமர்ப்பிக்கப் பட வேண்டிய ஆவணங்கள்* |
|---|---|---|
| | | 10. பதினெட்டு வயது பூர்த்தியடைந்த வாழ்க்கைத் துணை , பெற்றோர் அல்லது ஒரு பிள்ளை அல்லது உடன் பிறந்தோர் கைமாற்றுப்பெறுநராக வரும்போது மேற்குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>(அ) இறந்த கைமாற்றுநரின் பிறப்புச் சான்றிதழின் சாற்றுப்படுத்தப்பட்ட பிரதி<br><br>(ஆ) இறந்த கைமாற்றுநரின் திருமணச் சான்றிதழின் சாற்றுப்படுத்தப்பட்ட பிரதி<br><br>(இ) இறந்த கைமாற்றுநரின் வாழ்கைத் துணையின் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி<br><br>(ஈ) இறந்த கைமாற்றுநரின் அந்தந்தப் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி<br><br>(உ) இறந்த கைமாற்றுநரின் அந்தந்தப் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி<br><br>(ஊ) இறந்த கைமாற்றுநரின் அந்தந்த உடன்பிறந்தோரின் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி<br><br>* மேற்போந்த ஆவணங்கள் அட்டவணை II இன் கீழ் உள்ளடக்கப்படுமிடத்து அததகைய ஆவணங்கள் மீள சமர்ப்பிக்கப்பட மாட்டாது |

* மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக, வசுவண்டி மற்றும் அதன் பணிக்குழுவுடன் தொடர்புடைய பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

1. வசுவண்டியின் பதிவுச் சான்றிதழ்
2. காப்புறுதிச் சான்றிதழ்
3. வாகன தகுதிச் சான்றிதழ்
4. இயைபான வருடத்தின் அரசிறை உரிமம் மற்றும் வாகன புகை பரிசோதனை சான்றிதழ்
5. இயைபான வசுவண்டியின் பரிசோதனை அறிக்கை
6. நிரந்தர ஓட்டுநரின் NTC அடையாள அட்டை (பிரதியுடன்)
7. மேலதிக ஓட்டுநரின் NTC அடையாள அட்டை (பிரதியுடன்)

8. நடத்துநரின் NTC அடையாள அட்டை (பிரதியுடன்)
9. பெருளளவில் இவ்வட்டவணைக்கு பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படிவத்திலான சத்தியக்கூற்றொன்று

அட்டவணை V இற்கான பின்னிணைப்பு

**சத்தியக்கூற்று**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் ...................................... (முகவரி) வசிக்கும் ............................... ( முழுப்பெயர்) ...............................( தேசிய அடையாள அட்டை இலக்கம் ) ஆகிய நான்,.............................. பெயர் கொண்ட கம்பனி ஆகிய நாம்............................ (பௌத்த/ இந்து/ இஸ்லாமிய/ கிறிஸ்தவ பக்தர் என்ற வகையில் பயபக்தியாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் பின்வருமாறு ...................... ( சத்தியஞ்செய்கின்றேன்/ வெளிப்படுத்துகின்றேன்).

1. நான்/ நாம் மேற்குறிப்பிடப்பட்ட பெயருடைய வெளிப்படுத்துநர்கள் ஆவோம்.

2. நான்/ நாம் இத்தால், ஆணைக்குழுவினால் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் எனக்கு/ எங்களுக்கு வழங்கப் பட்டவுடன் ................................ (வசுவண்டியின் பதிவு இலக்கம் ) அதனை அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட மார்க் கத்தில் மட்டும் அத்தகைய பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய காலத்துக்கு காலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படும் பயணங்கள் மற்றும் நேர அட்டவணைகளுக் கேற்ப தொழிற்படுத்த பிணிக்கப்பட்டுள்ளோம் என ........................

3. நான்/ நாம் இத்தால் நான்/ நாம் மேற்குறிப்பிடப்பட்ட வசுவண்டியை தொழிற்படுத்த நிலைத்திருக்கக்கூடிய நிதிசார் தகுதியைக் கொண்டிருக்கின்றேன் / கொண்டிருக்கின்றோம் என ...........................(சத்தியஞ்செய்கின் / வெளிப்படுத்துகின்)றேன்/றோம்.

4. நான்/ நாம் இத்தால், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எனக்கு / எங்களுக்கு வழங்கப்பட்ட பயணப்போக்குவரத்து சேவை அனுமத்திப்பத்திரத்தை வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு ஆணைக்குழுவினால் அத்தகைய அளிப்பு இடம்பெற்று இரண்டு வருடகாலம் முடிவடையும் முன் கைமாற்ற எந்தவொரு உரிமையும் இல்லை என ........... ............... (சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/றோம்.

5. நான்/ நாம் இத்தால், விண்ணப்பத்துடன் எந்தவொரு மோடியான ஆவணத்தையோ அல்லது பிழையான தகவலையோ நான்/ நாம் சமர்ப்பிக்கவில்லை என................................(சத்தியஞ்செய்கின்/ வெளிப்படுத்துகின்) றேன்/றோம்.

6. நான்/ நாம் இத்தால், போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணப்போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் கைமாற்றம் மற்றும் பயணபபோக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தின் அளிப்பு தொடர்பிலான எந்தவொரு தீர்மானத்தையும் நான்/ நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/ ஏற்றுக்கொள்கின்றோம் என ...................................................... (சத்தியஞ்செய்கின்/ சத்தியஞ்செய்கின்) றேன்/றோம்.

மேற்போந்த சத்திக்கூற்றானது மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உறுதிப்படுத்துநர் / உறுதிப்படுத்துநர்களுக்கு என்னால் வாசிக்கப்பட்டு , விளங்கப்படுத்தப்பட்டு, அவர்களால் அதன் உட்பொருள் புரிந்து கொள்ளப்பட்டு ...........ஆம் நாளன்று ...................... ஆந் திகதியில் எனது சமூகத்தில் உறுதிப்படுத்தி அவனுடைய/ அவளுடைய / அவர்களுடைய கையொப்பத்தை இட்டார்.

கையொப்பம்/ கம்பனியின்
உத்தியோகபூர்வ இலச்சினையும்

உறுதிப்படுத்துநர்.

எனது முன்னிலையில்

..................................................................

சத்தியப்பிரமாண ஆணையாளர்.

EOG01- 0174